2. தகவல் கோரல்.

உறுப்பினர் திரு. ஆர். டி. சீத்தாபதி சிறைச்சாலையிலிருந்து அவைக்கு வர ஏற்பாடு குறித்து.

திரு. ம. சங்கரலிங்கம் : மாண்புமிகு மேலவைத் தலைவரவர்களே, உங்களுடைய அனுமதியோடு நான் அரசினிடத்தில் ஓர் வேண்டுகோளை வைக்க கடமைப்பட்டிருக்கிறேன். இந்த மாமன்றத்தில் உறுப்பினராக இருக்கக்கூடிய மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். டி. சீத்தாபதி அவர்கள் இப்போது சிறைச்சாலையில் இருக்கிறார்கள். தடையை மீறிய வழக்கில் சம்பந்தப்பட்டிருப்பதாகச் சொல்லலாம். அவர் சட்டமன்ற மேலவையின் உறுப்பினராக செயல்படுவதற்கு, காவலிலேயே அவரை இங்கே கொண்டு வந்து, மீண்டும் காவலோடு சிறைச்சாலைக்குக் கொண்டு செல்லலாமென்று தெரிவித்துக் கொள்கிறேன். அதன் மூலம் அவர் இந்த அவையில் உறுப்பினராகச் செயல்படுவதற்கான நிலை ஏற்படும். எனவே உறுப்பினர்கள் தங்கள் கடமைகளை ஆற்றுவதற்கு அரசு ஆவன செய்ய வேண்டுமென்ற வேண்டுகோள் விடுத்து, அதை அரசினர் செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 11-00)

மாண்புமிகு மேலவைத் தலைவர் : அரசுத் தரப்பிலிருந்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்வதற்கு முன்னதாக எதிர்க் கட்சித் தலைவருடைய தகவலுக்காகச் சொல்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. சீத்தாபதி எனக்குக் கடிதம் எழுதினார். சிறைச்சாலை சூப்பரின்டென்டுக்கு நான் கடிதம் எழுதி அவரை இங்கே அனுப்ப வேண்டுமென்று கடிதம் எழுதினார். அதுபற்றி விசாரித்ததில் அதுபோல் மரபு உயர்நீதி மன்றத்திலும், சுப்ரீம் நீதிமன்றத்திலும் இல்லை. தானே சட்டத்தை மீறி உட்பட்ட வழக்கில் தலைவர் ஈடுபடுவதற்கில்லை என்று சொன்னார்கள். சட்டமன்றத்திலும், நாடாளுமன்றத்திலும் அதுபோல் தீர்ப்பு அளிக்கப்பட்டிருப்பது பற்றி நான் அவருக்குத் தகவல் கொடுத்து விட்டேன். அரசுத் தரப்பில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லலாம்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, சட்டம் எல்லோருக்கும் பொதுவானது. சட்டத்தை இயற்றுவதற்குரியவர்கள் நாம் என்பதை நான் ஒத்துக்கொள்கிறேன். சட்டத்தை இயற்றுபவர்களே சட்டத்தை மீறுகின்றபோது, நடவடிக்கைக்கு ஆளாவது இயற்கை. சட்டப்படி அவர்கள் வெளியே வருவதற்கான வழி முறைகள் இருக்கின்றன. அவற்றை

அவர்கள் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். சிறைச்சாலையிலிருந்து இங்கு அவர்கள் காவல் துறையினரோடு அல்லது காவல் துறையினரின் பாதுகாப்போடு வருவது என்பது மாண்புமிகு உறுப்பினர்களுடைய பெருமைக்கும் சரியானது என்பதை நான் ஏற்றுக்கொள்வதற்கில்லை. அதுமட்டுமல்ல இப்போது காவல் துறை என்றாலே மாண்புமிகு உறுப்பினர்கள் ஏற்றுக்கொள்ள முடியாத சூழ் நிலை இருக்கிறது. இந்தச் சூழ்நிலையில் அவராகவே வருவதற்குரிய வாய்ப் புகள் சட்டப்படி இருக்கின்றன. சட்டப்படியுள்ள அந்த வாய்ப்புகளைப் பயன்படுத்துவதற்கு மாறாக தலைவரவர்களின் மூலமாக மேலவையின் மூல மாக வெளியிலே நடைபெற்றிருக்கிற ஒரு காரியத்திற்கு தங்களைத் தலையிடச் சொல்வது அல்லது இந்த அவையை தலையிடச் சொல்வது எந்த வகையிலும் நியாயமானதல்ல.

3. கவன ஈர்ப்பு.

(1) பட்டதாரி ஆசிரியர் கழகம் 9 அம்சக் கோரிக்கைகளை வலியுறுத்தி மாவட்டத் தலைநகரங்களில் உண்ணாவிரதப் போராட்டம் நடத்தியது குறித்து.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: திருவாளர்கள் க. மீனாட்சிசுந்தரம் மற்றும் பா. ரா. தாமஸ் ஆகியோர் கவன ஈர்ப்பு முன்னறிவிப்பு கொடுத்துள் ளார்கள்.

திரு. க. மீனாட்சிசுந்தரம்: தலைவரவர்களே, கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்—

"பட்டதாரி ஆசிரியர் கழகம் 9 அம்சக் கோரிக்கைகளை வலியுறுத்தி மாவட்டத் தலைநகரங்களில் உண்ணாவிரதப் போராட்டம் நடத்தியதும், தொடர் நடவடிக்கையாக மீண்டும் போராட்டம் நடத்தவிருப்பதுமான நிலையில் ஆசிரியர், மாணவர், பொது மக்களிடையே தோன்றியுள்ள பதட்ட நிலை குறித்து".

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: விவர அறிக்கை@ அவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

@209-2 2 ஆம் பக்கங்களில் இணைப்பு I ஆக அச்சிடப்பட்டுள்ளது